| | |
|---|---|
| | **தமிழ்நாடு அரசு**<br>**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை** |
| | **எழிலகம் (இணைப்பு), சேப்பாக்கம், சென்னை - 600 005.** |

அரசாணை(நிலை) எண்:96 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3)துறை நாள் 25.11.2021 இன்படி முழுநேர முனைவர் பட்டப் படிப்பு மேற்கொள்ளும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணவர்களுக்கு ஆண்டுக்கு தலா ரூ.1,00,000/- வீதம் 2021-2022-ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட விதிமுறைகளுக்குட்பட்டு 2023-2024 ஆம் ஆண்டில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பு பயின்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1) தமிழ்நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் **முழுநேர முனைவர் பட்டப்படிப்பு** (Ph.D.,) மேற்கொள்ளும் தமிழ்நாட்டைச் சார்ந்த ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்கள் மட்டும் விண்ணப்பிக்க தகுதி பெற்றவர். **பகுதி நேர ஆராய்ச்சி மாணவர்கள் பயன்பெற இயலாது.**

2) இத்திட்டத்தின்கீழ் பயனடைய நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான வரம்பான ரூ.8.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

3) இத்திட்டத்தின் கீழ் கல்வி ஊக்கத் தொகை வேண்டி விண்ணப்பிக்க முதுகலைப் பட்டப் படிப்பில் 50% விழுக்காடு பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

4) 1600-க்கும் அதிகமான எண்ணிக்கை அளவில் கல்வி ஊக்கத் தொகை வழங்கக்கோரி விண்ணப்பங்கள் வரப்பெறும் நேர்வில் மாணாக்கர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் 1600 பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

5) **ஒன்றுக்கும் மேற்பட்ட கல்வி உதவித் தொகை / நிதியுதவித் திட்டத்தின் (போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை, JRF, National Fellowship for SC & ST., DPI Fellowship, RUSA, TRF & URF ) கீழ் பயன் பெறுபவராக இருத்தல் கூடாது. மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியுதவி அல்லது பிற திட்டங்களில் பெறும் நிதியுதவி இவற்றில் அதிக பயன்தரும் திட்டத்தை தேர்ந்தெடுக்க அனுமதிக்கலாம். மாணாக்கரின் விருப்புரிமையின்**

**அடிப்படையில் குறைவான பயன் தரும் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதி உதவியை உரிய கணக்குத் தலைப்பில் அரசுக்கு திரும்ப செலுத்த வேண்டும்.**

6) அரசாணை(நிலை) எண்:111 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3)துறை நாள் 18.11.2022 இன்படி மாணாக்கருக்கு பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்ட படிப்புப் பிரிவுக் கால அளவிற்கு மற்றும் அதிகப்பட்சமாக ஆறாண்டுகள் மட்டும் (Prescribed Duration of Course) ஊக்கத் தொகை அளிக்கப்படும்.

7) இவ்வாண்டிற்கான (2023-2024) இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் ரூ.16.00 கோடிக்கு மிகாதவாறு இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை முதல், இரண்டாம், மூன்றாம் நான்காம் ஐந்தாம் மற்றும் ஆறாம் ஆண்டுகளில் (படிப்புப் பிரிவுக் கால அளவிற்கு மட்டும்) பயிலும் அனைத்து மாணவர்கள் உட்பட மொத்தம் 1600 மாணாக்கர்களுக்கு மேல் மிகாதவாறு மதிப்பெண் தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

8) முதல் வருடம் சேர்க்கையின் அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் கல்வி ஊக்கத் தொகை வழங்கலாம். இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் மற்றும் ஆறாம் ஆண்டுகளுக்கு மாணவர் பயிலக் கூடிய படிப்பு பிரிவின் துறை தலைமை அலுவலர் (Head of the Department) மற்றும் ஆராய்ச்சி வழிகாட்டி அலுவலரால் (Guide) முந்தைய ஆண்டுகளில் மாணவரால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் திருப்திகரமான முன்னேற்றம் குறித்து அளிக்கப்படும் சான்றிதழின் அடிப்படையில் வழங்கப்படும்.

9) தேவை ஏற்படின் முழுநேர முனைவர் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் 1600 மாணவர்களில் கலைப்பிரிவு (Arts stream) அறிவியல் பிரிவு (Science stream) பொறியியல் பிரிவு (Engineering stream) மற்றும் பிற பிரிவுகள் போன்றவற்றிற்கு அந்தந்த வருடங்களில் விண்ணப்பிக்கும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேவையான விகிதாச்சார எண்ணிக்கையில் பிரித்து வழங்கப்படும்.

10) விண்ணப்ப படிவத்தில் எவ்வித கலமும் விடுபடாமல், முழுமையாக பூர்த்தி செய்து இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய **கடைசி நாள் 31.12.2023 அன்று மாலை 5.45 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

11) **31.12.2023-க்கு பிறகும், விளம்பரம் வெளியிடுவதற்கு முன்னர், பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் எனில் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி, இயக்குநர், ஆதிதிராவிடர் நலத இயக்குநரகம், எழிலகம்(இணைப்பு), சேப்பாக்கம், சென்னை – 600 005.**

12) 2023-2024 ஆம் ஆண்டு கல்வி ஊக்கத் தொகை பெற மாணாக்கர்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பத்தினை மட்டுமே பயன்படுத்த வேண்டும். **முந்தைய ஆண்டு விண்ணப்பங்கள் மூலம் கல்வி ஊக்கத் தொகை பெற மாணாக்கர்கள் விண்ணப்பித்திருப்பின் கல்வி ஊக்கத் தொகை வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**

13) முழு நேர முனைவர் பட்டப் படிப்புப் பயில பல்கலைக் கழகத்தால் ஆராய்ச்சிக் காலம் குறிப்பிடப்பட்ட பதிவு அனுமதிக் கடிதம், நெறியாளரின் உறுதிமொழி கடிதம் மற்றும் வழிக்காட்டியின் பரிந்துரை கடிதம் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும். Bonafide சான்றிதழ் மட்டும் இணைக்கப்பட்டிருந்தால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும், கல்வி நிறுவன முதல்வரது கையொப்பம் மற்றும் பல்கலைக்கழக பதிவாளரின் பரிந்துரையுடன் விண்ணப்பம் வரப்பெற வேண்டும். தவறும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ஆதிதிராவிடர் நல இயக்குநர்.

## இணைப்பு

## 2023-2024 ஆம் ஆண்டில் முழுநேர முனைவர் பட்டப் படிப்புப் பயிலும் ஆதிதிராவிடர்,பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களுக்கு ஊக்கத் தொகை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்.

(தகுதியுள்ளதை டிக் செய்யவும்)

புதியது ☐

புதுப்பித்தல் ☐

கடவுச் சீட்டு அளவு புகைப்படம் ஒட்டப்பட வேண்டும். (முதல்வர் சான்றொப்பத்துடன்)

| | | | |
|---|---|---|---|
| ஏற்கனவே இக்கல்வி ஊக்கத் தொகை பெற்றுள்ளீரா ஆம் எனில் எந்தெந்த ஆண்டு ✓ செய்யவும் | | ஆம் / இல்லை<br>2017-2018 ☐<br>2018-2019 ☐<br>2019-2020 ☐<br>2020-2021 ☐<br>2021-2022 ☐<br>2022-2023 ☐ | |
| 1 | மாணவர் பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2 | பாலினம்<br>✓ செய்யவும் | ஆண் ☐ பெண் ☐<br>மூன்றாம் பாலினத்தார் ☐ | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | பிறந்த தேதி | நாள் | | மாதம் | | வருடம் | | | | |
| | | | | | | | | | | |
| 4 | இனம்<br>✓ செய்யவும் | ஆதிதிராவிடர் (SC) ☐<br>பழங்குடியினர் (ST) ☐<br>மதம் மாறிய கிறித்துவ<br>ஆதிதிராவிடர் (SCC) ☐ | | | | | | | | |
| | **சாதி உட்பிரிவு (சான்றொப்பமிடப்பட்ட சான்றிதழ் நகல் இணைக்கப்படவேண்டும்)** | | | | | | | | | |
| 5 | சாதிச்சான்றிதழ் எண் | | | | | | | | | |
| 6 | பெற்றோர் பெயர் | தந்தை | | | | | | | | |
| | | தாய் | | | | | | | | |
| 7 | நிரந்தர முகவரி | | | | | | | | | |
| | கதவு எண் மற்றும் தெருவின் பெயர் | | | | | | | | | |
| | கிராமம்/ நகரப் பெயர் | | | | | | | | | |
| | வட்டப்பெயர் | | | | | | | | | |
| | மாவட்டப்பெயர் | | | | | | | | | |
| | அஞ்சல் குறியீட்டு எண் | | | | | | | | | |
| | தொலைபேசி எண் | | | | | | | | | |
| | செல்பேசி எண் | | | | | | | | | |
| | மின்னஞ்சல் முகவரி | | | | | | | | | |

| | | |
|---|---|---|
| 8 | தற்போதைய முகவரி அஞ்சல் குறியீட்டுடன் | |
| 9 | குடும்ப ஆண்டு வருமானம் (விண்ணப்ப நாளில் **செல்லத்தக்க** அசல் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | |
| | வருமானச் சான்றிதழ் எண் | |
| 10 | முதுகலைப் பட்டம் (M.Sc / M.A / ME/ MLIS., etc) | |
| | பாடப்பிரிவு (Tamil / Engilsh / chemistry,etc.,) | |
| 11 | முதுகலைப் பட்டத்தில் பயின்ற பாடங்கள் (மதிப்பெண் பட்டியலின் படி அனைத்து பாடங்களுக்கும் விடுபடாமல் பாடவாரியாக மதிப்பெண்கள் குறிப்பிடப்பட வேண்டும்) | மதிப்பெண்கள் |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | கூடுதல் | |
| 12 | முதுகலைப் பட்டப் படிப்பில் தேர்ச்சி விழுக்காடு<br>(துல்லியமாக குறிப்பிடப்பட வேண்டும்) | % |

| | | |
|---|---|---|
| 13 | **முதுகலைப் பட்டப் படிப்பு சான்றொப்பமிடப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் நகல் இணைக்கப்படவேண்டும்** | |
| 14 | ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில் பயின்ற பாடம் | |
| | ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில் மதிப்பெண் பட்டியலின்படி அனைத்து பாடங்களுக்கும் விடுபடாமல் பாடவாரியாக மதிப்பெண்கள் குறிப்பிடப்பட வேண்டும் | மதிப்பெண்கள் |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | கூடுதல் | |
| 15 | ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில் தேர்ச்சி விழுக்காடு (துல்லியமாக குறிப்பிடப்பட வேண்டும்) | % |
| 16 | **ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பு சான்றொப்பமிடப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் நகல் இணைக்கப்படவேண்டும்** | |

<table>
<tr><td rowspan="2">17</td><td rowspan="2">முனைவர் பட்டம் கல்வி பயில எக்கல்வி தகுதியினை அடிப்படையாகக் கொண்டு சேர்க்கை பெற்றுள்ளீர்<br>✓ செய்யவும்</td><td>முதுகலை</td><td></td></tr>
<tr><td>ஆய்வியல் நிறைஞர்</td><td></td></tr>
<tr><td rowspan="5">18</td><td rowspan="5">முனைவர் பட்ட படிப்பு அறுதியிடப்பட்ட அதிகபட்ச மொத்த கால அளவு, பல்கலைக் கழக அனுமதிக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு<br>✓ செய்யவும்</td><td>இரண்டாண்டுகள்</td><td></td></tr>
<tr><td>மூன்றாண்டுகள்</td><td></td></tr>
<tr><td>நான்காண்டுகள்</td><td></td></tr>
<tr><td>ஐந்தாண்டுகள்</td><td></td></tr>
<tr><td>ஆறாண்டுகள்</td><td></td></tr>
<tr><td rowspan="6">19</td><td rowspan="6">தற்போது முனைவர் பட்டம் பயிலும் கல்வியாண்டு (2022-2023)<br>✓ செய்யவும்</td><td>முதலாமாண்டு</td><td></td></tr>
<tr><td>இரண்டாமாண்டு</td><td></td></tr>
<tr><td>மூன்றாமாண்டு</td><td></td></tr>
<tr><td>நான்காமாண்டு</td><td></td></tr>
<tr><td>ஐந்தாமாண்டு</td><td></td></tr>
<tr><td>ஆறாண்டுகள்</td><td></td></tr>
<tr><td>20</td><td>முனைவர் பட்டப் படிப்பு மேற்கொள்ளும் கல்வி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</td><td colspan="2"></td></tr>
<tr><td>21</td><td>முனைவர் பட்டப் படிப்புக்கு அங்கீகாரம் வழங்கும் பல்கலைக் கழகத்தின் பெயர் மற்றும் முகவரி</td><td colspan="2"></td></tr>
<tr><td rowspan="2">22</td><td rowspan="2">முனைவர் பட்டப் படிப்புப் பயில பல்கலைக் கழகத்தால் ஆராய்ச்சிக் காலம் குறிப்பிடப்பட்ட அனுமதிக் கடிதம் இணைக்கப்பட்டுள்ளதா?<br>(இல்லையெனில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்) எக்காரணத்தைக் கொண்டும் Bonafide Certificate ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.</td><td>ஆம்</td><td></td></tr>
<tr><td>இல்லை</td><td></td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 23 | மாணவரது சேமிப்புக் கணக்கு விவரம் (மாணவரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்க IFSC, MICR தெளிவான நகலுடன் இணைக்கப்பட வேண்டும்) | | |
| | அ) சேமிப்புக் கணக்கு எண் | | |
| | ஆ)வங்கியின் பெயர் மற்றும் கிளை முகவரியுடன் | | |
| | இ)IFSC குறியீட்டு எண் | | |
| | ஈ) MICR குறியீட்டு எண் | | |
| 24 | ஆதார் எண் (கட்டாயம் குறிப்பிட வேண்டும் மற்றும் நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |
| 25 | இரண்டாமாண்டு / மூன்றாமாண்டு / நான்காமாண்டு / ஐந்தாமாண்டு மற்றும் ஆறாமாண்டு மாணவர்களாயின் வழிகாட்டியின் குறிப்புரை மற்றும் பரிந்துரை கடிதம் தனியே இணைக்கப்பட வேண்டும் . அதில் மாணாக்கரின் கல்வி முன்னேற்றம் குறித்த குறிப்பு இடம் பெற வேண்டும். கடித நகல் இணைக்கப்பட்டுள்ளதா? | ஆம் | |
| | | இல்லை | |

**சான்று**

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதியளிக்கிறேன். என்னால் அளிக்கப்பட்ட மேற்கண்ட விவரங்கள் பின்னாளில் தவறு என கண்டறியப்பட்டால் எனக்கு ஒப்பளிக்கப்படும் கல்வி ஊக்கத் தொகை முழுவதையும் அரசுக்கு எவ்வழியிலும் திருப்பிச் செலுத்த உறுதியளிக்கிறேன். **முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் ஏற்கிறேன்.**

நாள்: மாணவரது கையொப்பம்

நாள்: வழிகாட்டியின் கையொப்பம்

**கல்வி நிலையத் தலைவரால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது**

## TO BE FILLED BY THE HEAD OF THE INSTITUTION

| | | | |
|---|---|---|---|
| 1 | கல்லூரியின் வகைப்பாடு | மத்திய அரசு கல்லூரி | |
| | | மாநில அரசு கல்லூரி | |
| | | அரசு உதவி பெறும் கல்லூரி | |
| | | சுயநிதி கல்லூரி | |
| | | தன்னாட்சி கல்லூரி | |
| | | நிகர்நிலைப் பல்கலைக்கழகம் | |
| 2. | கல்வி நிலையத்தின் பெயர் மற்றும் முழுமையான முகவரி | | |
| 3 | மாணாக்கரின் பெயர் | | |
| 4 | மாணவரது குடும்ப ஆண்டு வருமானம் (விண்ணப்ப நாளில் ஓராண்டு காலத்திற்குள் பெறப்பட்ட அசல் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | | |
| 5 | மாணவரின் முதுகலைப் பட்டப் படிப்பில் தேர்ச்சி விழுக்காடு (துல்லியமாக குறிப்பிடப்பட வேண்டும்) | % | |
| 6 | மாணவரின் ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில் தேர்ச்சி விழுக்காடு (துல்லியமாக குறிப்பிடப்பட வேண்டும்) | % | |
| 7 | மாணவர் முனைவர் பட்டப் படிப்பு பயில எக்கல்வி தகுதியினை அடிப்படையாகக் கொண்டு சேர்க்கை பெற்றுள்ளார் ✓ செய்யவும் | முதுகலை | |
| | | ஆய்வியல் நிறைஞர் | |
| 8 | மாணாக்கர் கல்வி பயிலும் முறை ✓ செய்யவும் | முழுநேரம் | |
| | | பகுதி நேரம் | |

| | | | |
|---|---|---|---|
| 9 | மாணவர் முனைவர் பட்டப் படிப்பு பயில தேர்வு செய்துள்ள ஆராய்ச்சியின் தலைப்பு | | |
| 10 | மாணாக்கருக்கு முனைவர் பட்டப் படிப்பு பயில பல்கலைக் கழகம் அனுமதித்துள்ள **அதிகபட்ச** மொத்த கால அளவு | இரண்டாண்டுகள் | |
| | | மூன்றாண்டுகள் | |
| | | நான்காண்டுகள் | |
| | | ஐந்தாண்டுகள் | |
| | | ஆறாண்டுகள் | |
| 11 | கல்வி கால அளவு தொடங்கிய நாள் (பல்கலைக்கழக அனுமதிக் கடிதத்தில் உள்ளவாறு) | நாள் / மாதம் / வருடம் | |
| 12 | கால அளவு முடியும் நாள் (பல்கலைக் கழக அனுமதிக் கடிதத்தில் உள்ளவாறு) | நாள் / மாதம் / வருடம் | |

**<u>கல்வி நிறுவனத் தலைவர் மற்றும் பல்கலைக்கழக பதிவாளரின் பரிந்துரைக்கும் சான்று</u>**

மாணவர் சார்பாக மேலே பூர்த்தி செய்யப்பட்ட விவரங்கள் அனைத்தும் சரியானவை என்று உறுதி கூறுகிறேன். மேலும் மாணவருக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்க பரிந்துரை செய்கிறேன்.

நாள்:

கல்வி நிறுவன முதல்வரது கையொப்பம்.
பெயர் மற்றும் அலுவலக முத்திரையுடன்.

பல்கலைக்கழக பதிவாளரின் கையொப்பம்
பெயர் மற்றும் அலுவலக முத்திரையுடன்.

(ஒம்/-த.ஆனந்த்)
ஆதிதிராவிடர் நல இயக்குநர்,

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## முழுநேர முனைவர் பட்டப் படிப்பு பயிலும் (Ph.D) மாணாக்கர்களுக்கான ஊக்கத் தொகைத் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் செயற்படுத்தப்படும் முழுநேர முனைவர் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணாக்கர்களுக்கான கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் **2023-2024-ஆம்** கல்வியாண்டில் முழுநேர முனைவர் பட்டப்படிப்பு (Ph.D) பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. திட்ட விதிமுறைகள் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் **www.tn.gov.in/forms/deptname/1** என்ற இணையதள முகவரியில் யாவரும் பதிவிறக்கி பயன்படுத்திக்கொள்ளும் வண்ணம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் தகவல் அனுப்பப்பட்டுள்ளது. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **31.12.2023 நாளன்று மாலை 5.45 மணிக்குள்**,"இயக்குநர், ஆதிதிராவிடர் நல ,இயக்குநரகம், எழிலகம் (இணைப்பு), சேப்பாக்கம், சென்னை-600 005" என்ற முகவரிக்கு வந்து சேரும் வண்ணம் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் முந்தைய கல்வியாண்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ள இயலாது.

ஆதிதிராவிடர் நல இயக்குநர்,